6.1 மார்ச் மாதம் 16 ஆம் திகதி, இ.மா.ப. பணியகத்தின் பொ.மு. மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் ஆகியோர் இணைந்து 6000 நிகழ்ச்சிகளுக்கு அலரி மாளிகையில் இடவசதியளிக்கக்கூடிய மாநாட்டு வசதிகள் தொடர்பான சோதனையிடும் விஜயத்தை மேற்கொண்டது. இவர்கள், இதன் போது எதிர்கால MICE சுற்றுலா நிகழ்ச்சிகள் தொடர்பில் சுற்றுலாக் கைத்தொழிலுக்குக் கிடைக்கக்கூடிய கூறப்பட்ட இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் சாத்தியம் பற்றியும் மதிப்பீடு செய்தனர்.



அலரி மாளிகையிலுள்ள மாநாட்டு வசதி

### 7. கைத்தொழில் உறவுகள்

7.1 இ.மா.ப. இலங்கை தொழில்சார் மாநாடு, கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கும் அமைப்புடன் (SLAPCEO) மிகவும் நெருக்கமாக ஒன்றிணைந்து சுற்றுலாக் கைத்தொழிலின் கொள்கை, இயக்கச்செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் நிமித்தம் தொடர்ந்தும் பாடுபட்டுள்ளது. இந்த மார்ச் மாதத்தில், SLCPEO அமைப்பின் தலைவரது அழைப்பின் பேரில், இ.மா.ப. கலதாரி ஹோட்டலில் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற IAPCO அலுமினியிலும் மற்றும் உறுப்பினர்கள் ஒன்றுகூடும் கூட்டத்திலும் கலந்துகொண்டது.

7.2 மே மாதம் 26 ஆம் திகதி, SLAPCEO, IAPCO அலுமினியை ஆரம்பித்து வைத்தது. இந்த முதலாவது அலுமினிக் கூட்டத்தில் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி தொடர்பான மகாமையாளர் திருமதி ஐரோஷி ஜயவர்த்தன அவர்களினால் இ.மா.ப. பிரதிநிதிப்படுத்தப்பட்டது. இந்த அரங்கில் இ.மா.ப. பயிற்சி முன்னெடுப்புகள் தொடர்பில் பின்வரும் கருத்துரைகளும் மற்றும் எதிர்பார்க்புகளும் ஆராயப்பட்டன. எதிர்கால நடவடிக்கைகளின் நிமித்தம் கீழ்காணும் விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டன.

- MICE முக்கியத்துவம் பற்றி ஹோட்டல்கள் / DMC கள் முதலியவற்றின் தலைவர்களுக்கு (தொழிபடக்கூடிய தலைவர்கள் - பி.நி.அ. / பொ.மு.) போதிக்கும் வகையில் கருத்தரங்குகளை நடத்துதல்.
- வித்தியாசமான மட்டங்களில் (அதாவது தனித்தனியாக: சிரேஷ்ட முகாமை, நடுத்தர முகாமை, இயக்கச்செயற்பாட்டு மட்டங்கள்) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- ஹோட்டல் உரிமையாளர்கள், DMC கள் முதலிய தரப்புகளுக்கு தற்பொழுது நடத்தப்படுகின்ற இ.மா.ப. பிராந்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விஸ்தரிக்கச்செய்யும் சாத்தியம்.



### 8. நிதி மற்றும் நிருவாகப் பிரிவு

**8.1 தேவைப்பாடுகளுக்கு இணங்க, முன்னேற்ற அறிக்கைகள், செயலாற்றுகை அறிக்கை, பொது செயலாற்றுகை மற்றும் முன்னேற்ற அறிக்கைகள், செயல் திட்டங்கள், செயற்பாட்டு அறிக்கைள் முதலியன அடங்கலாக பல நிறுவனங்கள் தேவைப்படுத்திய போது அத்தகைய சகல அறிக்கைகளையும் இந்தப் பணியகம் பெற்றுக் கொடுத்துள்ளது.**

### 8.2 நிறுவனக் கட்டமைப்பு

| பதவி | அங்கீகரிக்ப்பட்டஆளணி பதவிகளின் எண்ணிக்கை | ஏற்கெனவேயுள்ள ஆளணி பதவிகளின் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | 1 | 1 | |
| சிரேஷ்ட முகாமையாளர் | 1 | 1 | |
| முகாமையாளர் | 2 | 1 | 1 |
| உதவி முகாமையாளர் | 3 | 3 | 0 |
| முகாமைத்துவ உதவியாளர் | 2 | 1 | 1 |
| சாரதி | 1 | 1 | |
| அலுவலக உதவியாள் | 1 | 0 | 1 |
| மொத்தம் | 11 | 8 | 3 |

### 8.3 இ.மா.ப. ஊழியர்கள்

திரு எச்.. உதய குமார ஷரூபசிங்க - தலைவர்
திரு விபுல வனிகசேக்கர - பொது முகாமையாளர்
திருமதி அச்சினி தந்துனகே - சிரேஷ்ட முகாமையாளர் (இயக்கச்செயற்பாடுகள்)
திருமதி குமுது ஹென்னடிகே - சந்தைப்படுத்தல் முகாமையாளர்
திருமதி பியுமினி பீரிஸ் - உதவி முகாமையாளர்
- (ஆராய்ச்சி, அபிவிருத்தி, வர்த்தக
- நியமங்கள், சங்கக் கூட்டங்கள்)
திருமதி ரஞ்ஜிகா பெரேரா - உதவி முகாமையாளர்
- (கணக்குகள், நிருவாகம்)

திரு சம்பிக்க அனுராத - உதவி முகாமையாளர்
- (சந்தைப்படுத்தல்)
திருமதி அருந்தெத்தி குமாரி - உதவி முகாமையாளர்
திரு சன்ஜீவ பெரேரா - சாரதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } TIP/A/SLCB/01/15/02 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2016 திசெம்பர் 24

தலைவர்,

இலங்கை மாநாட்டுப் பணியகம்.

**இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை பணியகத்தின் தலைவருக்கு 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk





### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

ஆண்டினுள் நிதி அசைவுகளைக் கருத்திற் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் பலவீனங்களின் பிரகாரம் அதன் சரியான தன்மை மற்றும் சமப்படுத்துதல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(i) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,991,772 ஆன பெறுமானத்தேய்வு காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 761,585 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதி அசைவிற்கு தாக்கம் செலுத்தாத முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 720,000 கிரயத்திலான கணனி மென்பொருளை அகற்றியமை காசுப் பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்தது.





(iii) நிதிச் செயலாற்றல் கூற்றில் முன்னைய ஆண்டுகளில் சீராக்கமொன்றாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 510,187 பெறுமதியான காசுப்பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டின் மிகைக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி அசைவு அல்லாத சேர்க்கப்பட வேண்டிய பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 960,032 பெறுமதியான நிதி நடவடிக்கைகளில் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

முன்னைய ஆண்டின் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு மீதிகளுக்கு இடையே ரூபா 510,188 வேறுபாடொன்று நிருபணமாகியிருந்த போதிலும் அதனை இணங்கண்டு உரிய கணக்குகளில் சீராக்குவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்களாக மீளாய்வாண்டின் செலவினங்களிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சட்டரீதியான மூலதன உரித்தொன்று இல்லாமல் பணியகத்தின் நிர்வாக அலுவலகத்தை பராமரித்துச் செல்லும் ஹோட்டெல் முகாமைத்துவ நிறுவனத்திற்குரிய கட்டிட வளாகத் திருத்தங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 2,020,565 ஆன செலவினம் நிதி நிலைமைக் கூற்றில் கட்டிடங்களாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,565,003 கிரயமான எஞ்சிய மேம்பாட்டு உருப்படிகள் இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 834,380 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நீண்டகாலமாக முதலீட்டுக் கணக்கின் மீதி நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் ரூபா 25,300,000 ஆக இருந்த போதிலும் வங்கி அறிக்கையின் பிரகாரம் அம் மீதி ரூபா 26,549,988 ஆக இருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

ரூபா 6,390,785 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பிரதான நாட்குறிப்பில் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 49,758,863 இற்குரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

2011 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய பெறுமதிசேர் வரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 450,554 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 257 | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 05 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 105,986 ஆன செலவினம் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 386(6) | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 70,109 பெறுமதியான 5 காசோலைகள் பதவிநிலை உத்தியோகத்தரொருவரின் அங்கீகாரமின்றி திறந்த காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |



AGDSL
Auditor General's Department

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 27,407,006 மிகையொன்றாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 49,594,173 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 22,187,167 ஆல் குறைவடைந்திருந்தது. விற்பனைச் செலவினம் ரூபா 28,294,006 ஆல் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதி விளைவுகளில் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் வீழ்ச்சி 45 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது நிறுவகத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 78,260,615 தொகையான பணியகத்தின் பங்களிப்பு படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் அது ரூபா 40,355,425 ஆக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா விவகார அதிகாரச்சட்டத்தின் 42(2) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் நோக்கங்களுக்கிடையே கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் இலக்குகளையும் இதுவரை நிறைவேற்ற முடியாதிருந்தது.

- சர்வதேச, வலயரீதியான மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் நடைபெறும் இடமாக மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா இடமாக இலங்கையை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் இலங்கை தொடர்பாக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் ஏற்படுவதைப் பொறுப்பாகத் திட்டமிட்டு பொதுக் கொள்கை ஒன்றை ஏற்படுத்துதல்.

- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களது பல்வேறு பிரிவுகளிலும் உள்ளோருக்கும் அமைப்புகளுக்கும் தொழில்சார் நியமங்களை விதித்தலும் அந்நியமங்களைப் பேணி அமுல்படுத்தலும்.

- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலாத்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரத்தினர் அல்லது அமைப்புகளினது தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தியைத் ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்.

- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சிறு சுற்றுலாவை அபிவிருத்தி செய்தலும் அவற்றின் மேம்பாட்டிலும் ஈடுபட்டுள்ள ஏதாவது சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் இணைந்து கொள்ளலும், அவற்றில் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு அல்லது ஏதாவது சங்கம் அல்லது அமைப்புக்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடலும்.



Auditor General's Department

- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கையை சுற்றுலா அல்லது சுற்றுலா மார்க்கமொன்றாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் சந்தைப்படுத்தலுக்கான வழிகாட்டுதலைப் பணியகத்திற்கு வழங்குதல்.

- உபசரிப்புச் சேவை அடங்கலான போதியளவு, கவர்ச்சியானதும் வினைத்திறனுடனுமான சுற்றுலாச் சேவைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் விதத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதலும் மேம்படுத்தலும்.

(ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 13 பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 172.30 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் ரூபா 76.84 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது 85 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 19 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

4.2 பதவியணியினர் நிர்வாகம்

பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 27 சதவீத வெற்றிடம் நிலவியதுடன், முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மனித வளத்திற்கான மொத்தக் கிரயம் முறையே ரூபா 8,153,546 மற்றும் ரூபா 10,956,647 ஆக இருந்தது. இதற்கமைய, முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ஒரு ஊழியரின் பொருட்டான கிரயம் முறையே ரூபா 1,019,193 மற்றும் ரூபா 1,369,581 ஆக இருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம்

ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 35 நாட்கள் தாமத்தின் பின்னர் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2015 – 2017 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் எதிர்வரும் 03 ஆண்டுகளில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கான பாதீடு எதிர்வுகூறப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம், தேவைப்பாட்டின் பிரகாரம் அண்மித்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் மற்றும் தந்திரோபாய திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவத்தின் பொறுப்பு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவாக இனங்காணங்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு காலத்திற்குரித்தாக எய்துவதற்காக எதிர்பார்த்த இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பார்த்த இலக்குகளும் நோக்கங்களும் ஆண்டின் போது எய்தப் பெற்றனவா என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் போதியளவிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

9





### 5.5 பெறுகைகள் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மைச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்கத்தின் 4.2.1(பீ) இன் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை.

### 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் 18 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கிடையே 29 சதவீதத்திலிருந்து 306 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணியகத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை |
| (ஆ) செயற்பாட்டுக் காலம் | 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் மேம்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளுக்கிடையே விலகல்கள் காணப்படல் |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

10

## இலங்கை மாநட்டுப் பணியகத்தின் 2015 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று

உள்ளடக்கம்

பக்க இலக்கம்


| | |
|---|---|
| நிதி நிலைக் கூற்று | 1 |
| வருமானக் கூற்று | 2 |
| கணக்குகளுக்குரிய குறிப்புகள் | 3 - 8 |
| ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று | 6 |
| காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று | 9 |




## இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2016 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைக் கூற்று

| **වත්කම්** | குறிப்பு | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|
| ජංගම වත්කම් | | | |
| கையிருப்பிலும் வங்கியிலுமுள்ள காசு | 6 | 19,190,456.71 | 19,190,456,71 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 7 | 44,430,635,48 | 37,494,092,43 |
| முற்-கொடுப்பனவுகள | 8 | 285,863,83 | 1,116,774,56 |
| இ.வ. நிதி முகாமைத்துவம் | | 100,317,290,38 | 66,895,567,22 |
| வைப்புக்கள் | 9 | 80,000,00 | 80,000,00 |
| ஊக்குவிப்புக்கான முற்கொடுப்பனவுகள் | | 4,733,855,70 | - |
| கிடைக்க வேண்டிய நி.வை.வ. / பெ.சே.வ. | | 450,553,57 | 450,553,57 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள** | | **153,510,075,90** | **125,227,444,49** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 10 | 20,830,148,78 | 20,692,156,39 |
| கழிக்குக: தேய்மானத்திற்கான ஏற்பாடு | | 12,082,556,78 | 11,320,972,02 |
| பதிவழிக்கப்பட்ட பெறுமானம | | 8,747,592,00 | 9,371,184,37 |
| நீண்டகால முதலீடுகள் | | 25,300,000,00 | 25,300,000,00 |
| மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள் | | 34,047,592,00 | 9,371,184,37 |
| மொத்தச் சொத்துக்கள | | **187,557,667,90** | **159,898,628,86** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன்களும் அட்டுறு செலவுகளும | 11 | 319,154,71 | 1,027,154,32 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள | | 319,154,71 | 1,027,154,32 |
| நீண்டகாலப் பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 2,177,247,50 | 1,217,215,00 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 2,496,402,21 | 2,244,369,32 |
| **மொத்தச் சொத்துக்கள** | | **185,061,265,69** | **157,654,259,54** |
| தேறிய சொத்துக்கள்.'.ஒப்புரவுகள | | | |
| ஆரம்பத்திலுள்ள ஒப்புரவு நிலுவை | | 6,433,492,69 | 6,433,492,69 |
| பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | 12 | 191,220,766,85 | 141,626,593,87 |
| சுற்றுலா அபிவிருத்தி நிதி | | (40,000,000,00) | (40,000,000,00) |
| குறித்த ஆண்டிற்கான இலாபம் | | 27,407,006,15 | 49,594,172,98 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள்/ஒப்புரவுகள | | 185,061,265,69 | 157,654,259,54 |

5 ஆம் பக்கத்திலும், 5 முதல் 10 வரையான பக்கங்களிலும் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்ற-ியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன. இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ..................................................... | ..................................................... |
| பிரேமா குரே | ஏ.சி.கே. தந்துன்னகே |
| தலைவர் | பதில் பொது முகாமையாளர் |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் | இலங்கை மாநாட்டுப் பணியகம் |

## 2015 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை

| **ආදායම** | குறிப்பு | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|
| விமான இறங்கு வரி | | 78,741,643,96 | 71,190,638,88 |
| சுற்றுலா அபிவிருத்தி வரி | | 40,807,067,56 | 42,098,256,03 |
| ஏனைய வருமானம | 13 | 6,439,927,06 | 4,161,454,8 |
| மொத்த வருமானம | | 125,988,638,58 | 117,450,349,74 |
| | | | |
| செலவுகள் | | | |
| வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள | 14 | 10,956,647,10 | 8”153”546“06 |
| விநியோகங்களும் பயன்பட்ட நுகர்வுப்பொருட்களும் | 15 | 4,964,463,50 | 6,019,425,50 |
| சந்தைப்படுத்தல் தொடர்பான செலவுகள | 16 | 77,496,622,19 | 49”202”615“82 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 17 | 3,049,749,09 | 2,936,544,49 |
| தேய்மான, கழிவு சார்ந்த செலவுகள் | 7 | 1,991,772,37 | 1,208,081,11 |
| ஏனைய செலவுகள | 18 | 605,370,00 | 315,800,00 |
| நிதி சார்ந்த ஆகுசெலவுகள் | 19 | 27,195,79 | 20,163,78 |
| முன்னைய ஆண்டு சீராக்கல் | | (510,187,61) | |
| | | 98,581,632,43 | 67,856,176,76 |
| | | | |
| **குறித்த ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை)** | | 27,407,006,15 | 49,594,172,98 |



## ஏனைய வருமானம்

| விடயம் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| ஊழியர் கடன் வட்டி வருமானம் | 27,483,47 | 21,888,38 |
| பங்குபற்றல் கட்டணங்கள் | 4,140,000,00 | 3,575,000,00 |
| கடன் வைப்பு வட்டி | 794,825,80 | 510,481,45 |
| **ஏனைய வருமானம்** | 1,477,617,79 | 54,085,00 |
| மொத்தம் | 6,439,927,06 | 4,161,454,83 |

**வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள்**

| **விடயம்** | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 5,602,956,00 | 5,106,438,59 |
| அமைய வேதனங்களும் ஏனைய கொடுப்பனவுகளும் | 509,630,08 | 367,678,63 |
| தலைவரின் கொடுப்பனவுகள் | 748,000,00 | 480,000,00 |
| தலைவரின் எரிபொருள், வாகன வாடகை | 350,203,48 | 413,385,00 |
| ஊழியர்களுக்கான மேலதிகநேரக் கொடுப்பவனவு | 261,998,81 | 171,787,60 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 502,786,65 | 519,693,15 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 100,941,39 | 103,753,03 |
| ஊழியர்களின் நலனோம்புகை | 289,363,27 | 67,113,03 |
| இலங்கை சுற்றுலா பணிய ஊழியர்களின் நலனோம்புகை | 347,900,00 | 125,000,00 |
| ஊழியர்களுக்கான சீருடைகள் | 53,622,50 | 33,371,28 |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவுகள் | 303,318,00 | 410,079,00 |
| பணிக்கொடை | 960,032,50 | 129,576,00 |
| வரவுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 240,383,00 | 225,670,75 |
| ஊழியர்களுக்கான போக்குவரத்து, எரிபொருள் கொடுப்பனவுகள் | 685,511,42 | - |
| **மொத்தம்** | **10,956,647,10** | **8,153,546,06** |

**விநியோகங்களும் பயன்பட்ட நுகர்வுப்பொருட்களும்**

| **விடயம்** | 2015 ரூ | 2014 ரூ |
|---|---|---|
| அச்சீடும் காகிதாதிகளும் | 555,388,04 | 341,303,12 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 614,620,07 | 552,541,82 |
| தபால் மற்றும் குரியர் சேவைகள் | 64,812,89 | 18,468,46 |
| பொது அலுவலக செலவுகள் | 217,836,13 | 217,231,40 |
| காப்புறுதி | 1,083,985,94 | 871,056,25 |
| அலுவலகப் பராமரிப்பு செலவுகள் | 351,352,89 | 301,985,54 |
| வாகன எரிபொருள் | 504,906,67 | 643,633,83 |
| வாகனங்கள் பராமரிப்பு, பழுதுபார்பு செலவுகள் | 211,195,98 | 338,427,00 |
| நானாவித செலவுகள் | 40,364,89 | 11,577,08 |
| பெ.சே.வ. | - | 83,201,00 |
| அலுவலக வாடகை | 1,320,000,00 | 2,640,000,00 |
| **மொத்தம்** | **4,964,463,50** | **6,019,425,50** |
| **சந்தைப்படுத்தல் தொடர்பான செலவுகள்** | | |

| விடயம் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| வெளிநாட்டு ஊக்குவிப்புகள்/கட்டணங்கள் | 49,405,557,73 | 39,099,249,20 |
| அச்சீடு/உற்பத்தி | 1,565,514,51 | 3,353,000,86 |
| விளம்பரம் | 1,314,756,90 | 716,762,44 |
| இ.மா.ப. இணையத்தளம் | 47,210,02 | 47,313,95 |
| ஏனைய சந்தைப்படுத்தல் செலவுகள் | 812,164,87 | 158,235,71 |
| நிகழ்ச்சிகளுக்கான உதவிகள் | 8,905,175,24 | 5,060,027,13 |
| பாகம் சுற்றுலாக்கள் | 2,547,712,01 | 738,026,53 |
| கூட்டுத்தாபனத்திற்கான.'.உள்நாட்டிற்கான சமர்ப்பணம் | - | 30,000,00 |
| SNAV 2016 | 15,000,00 | |
| எம்ஐசிஇ மார்ட் 2015 | 12,883,530,91 | - |
| **மொத்தம்** | **77,496,622,19** | **49,202,615,82** |

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

| விடயம் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| ICCA உறுப்புரிமைக் கட்டணம் | 451,703,21 | 529,225,46 |
| தரவுத்தளப் பராமரிப்பு | 50,000,00 | - |
| இ.மா.ப. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 554,267,20 | 2,359,338,23 |
| மாநாட்டுக் கேள்வி உதவிகள் | 1,993,778,68 | 47,980,80 |
| **மொத்தம்** | **3,049,749,09** | **2,936,544,49** |

**ஏனைய செலவுகள்**

| விடயம் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு | 393,950,00 | 265,800,00 |
| தொழில்சார் கட்டணங்கள் | 211,420,00 | 50,000,00 |
| **மொத்தம்** | **605,370,00** | **315,800,00** |

**நிதி சார்ந்த ஆகுசெலவுகள்**

| விடயம் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 27,195,79 | 20,163,78 |
| **மொத்தம்** | **27,195,79** | **20,163,78** |



## 10. சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் குறிப்பு இலக்கம் 2A

| குறிப்பு | குறியீடு | விவரம் | 2015.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 2015 ஆம் ஆண்டிற்கான சேர்வுகள் | 2015 ஆம் ஆண்டிற்கான மாற்றல்கள் | 2015.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 2015.01.01 ஆம் திகதியிலு-ள்ள திரண்ட தேய்மானம் | 2015.12.31 ஆம் திகதியிலுள்ள தேய்மானம் | 2015.12.31 ஆம் திகதியிலு-ள்ள திரண்ட தேய்மானம் | 2015.12.31 ஆம் திகதியிலுள்ள தேறிய புத்தகப் பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3.1 | 101 | அலுவலக உபகரணங்கள் | 6,501,820.49 | 534,510.00 | | 7,036,330.49 | 5,567,440.54 | 135,840.65 | 5,703,281.19 | 1,333,049.30 |
| 3.2 | 102 | கட்டிடங்கள் | 2,020,565.00 | - | | 2,020,565.00 | 117,866.00 | 101,028.00 | 218,894.00 | 1,801,671.00 |
| 3.3 | 103 | தளபாடங்களும் பொருத்-துக்களும் | 1,591,270.90 | 186,482.39 | | 1,777,753.29 | 1,049,571.62 | 71,341.72 | 1,120,913.34 | 656,839.95 |
| 3.4 | 110 | மோட்டார் வாகனங்கள் | 9,858,500.00 | 137,000.00 | | 9,995,500.00 | 3,355,906.25 | 1,683,562.00 | 5,039,468.25 | 4,956,031.75 |
| | | உப மொத்தம் | 19,972,156.39 | 857,992.39 | | 20,830,148.78 | 10,090,784.41 | 1,991,772.37 | 12,082,556.78 | 8,747,592.00 |

## இலங்கை மாநாட்டுப் பணியகம்

2015 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளுகுரிய குறிப்புகள்

### 1. பொதுவான தகவல்கள்

இலங்கை மாநாட்டுப் பணியகம் (இ.மா.ப.)

இலங்கை மாநாட்டுப் பணியகம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. இந்தப் பணியகம் இலங்கையில் அமைந்துள்ளது. இந்தப் பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட தலைமை நிலையம் இலக்கம் 78, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியிலுள்ள ஹோட்டல் பாடசாலைக் கட்டிடத்தின் 4 ஆம் மாடியில் அமைந்துள்ளது.
இ.மா.ப. மாநாடுகள், கூட்டுத்தாபனக் கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை மேம்படுத்தும் பணியில் ஈடுபடுகின்றது.

### 2. கணக்குகள் தயாரித்தல் அடிப்படையும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் பிரயோகிக்கப்பட்டு தொடர்ச்சியாக வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. வருமானமும் ஆகுசெலவும் அட்டுறு செய்யப்பட்டு அத்தகைய வருமானம் மற்றும் செலவுகள் தொடர்புபடும் காலப் பகுதியின் நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. கணக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கல்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

### 3. சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள

சகல சொத்துக்களும், பொறித்தொகுதிகளும், உபகரணங்களும் கொள்வனவு ஆகுகுசெலவின் அல்லது நிர்மாண ஆகுசெலவின் அடிப்படையில் வரலாற்று ஆகுசெலவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தேய்மானத்திற்கான ஏற்பாடு உரித்துடமை காலத்திற்கான ஆகுசெலவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேய்மான வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | வீதம் |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10% |
| கட்டிடம் | 5% |

### 4. பொறுப்புக்களும் ஏற்பாடும்

ஐந்தொகைக் கணக்குத் திகதியிலுள்ள சகல பொருண்மை வாய்ந்த பொறுப்புக்களும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 5. ஓய்வூதிய நன்மைகள்

1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய ஓய்வூதிய நன்மைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேவை முடிவுறுத்தல் நன்மைகளுக்கான ஏற்பாடுகள் தொடர்ச்சியான சேவையின் ஒவ்வொரு வருடத்திற்குமான நடைமுறை அரை மாத சம்பளத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், உரிய பொறுப்பு 05 வருடங்கள் நிறைவின் பேரில் உருவாகும்.



## இலங்கை மாநாட்டுப் பணியகம்

2015 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள் | | 27,407,006.15 |
| மிகை/(பற்றாக்குறை) | | |
| காசு சாராத நகர்வுகள் | | |
| தேய்மானம் | 761,584.76 | |
| வருமதிகளிலுள்ள (அதிகரிப்பு.'.குறைவு) | (6,936,543.05) | |
| கொடுப்பனவுகளிலுள்ள (அதிகரிப்பு.'.குறைவு) | 830,910.73 | |
| கடன்களிலும் அட்டுறு செலவுகளிலுமுள்ள அதிகரிப்பு.'.குறைவு | (707,999.61) | |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள் | | (6,052,047.17) |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள் | | |
| முற்பணக் கொடுப்பனவு | (4,733,855.70) | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | (857,992.39) | |
| இ.வ. நிதிய முகாமைத்துவ கணக்கு | (33,421,723.16) | |
| மென்பாகங்கள் அகற்றல் | 720,000.00 | |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள் | | (38,293,571.25) |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள் | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 960,032.50 | 960,032.50 |
| காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு.'.(குறைவு) | | (15,978,579.77) |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும் | | 19,190,456.71 |
| குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும் | | 3,211,876.94 |

## இலங்கை மாநாட்டுப் பணியகம் 2015 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

| கையிருப்பிலும் வங்கியிலுமுள்ள காசு | | |
|---|---|---|
| விடயம் | 2016 (ரூ.) | 2015 (ரூ.) |
| வங்கியிலுள்ள காசு - இலங்கை வங்கி | (91,794.29) | (1,356,742.86) |
| வங்கியிலுள்ள காசு - மக்கள் வங்கி | 4,978,114.86 | 4,568,619.80 |
| சில்லறைக் காசு | | - |
| **கையிலும் வங்கியிலும் இருக்கும் மொத்த நிலுவை** | **4,886,320.57** | **3,211,876.94** |

| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | | |
|---|---|---|
| விடயம் | 2016 (ரூ.) | 2015 (ரூ.) |
| ஊழியர்களுக்கான கடன் | 441873.2 | 556,689.20 |
| விழா முற்பணம் | - | 2,500.00 |
| ஊழியர்களிடமிருந்து வரவேண்டிய தொகை | | - |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகர சபை | | 43,871,446.28 |
| சன்வே ஹொலிடேயிஸ் | | - |
| டன்ஜரின் டுவர்ஸ் | | - |
| **மொத்தம்** | | **44,430,635.48** |

### முற்-கொடுப்பனவுகள்

| விடயம் | 2016 (ரூ.) | 2015 (ரூ.) |
|---|---|---|
| ஊக்குவிப்புக்கான கொடுப்பனவுகள் | 101,018.37 | 101,018.37 |
| காப்புறுதி | 88,934.51 | 88,934.51 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 66,119.92 | 95,910.95 |
| **மொத்தம்** | **256,072.80** | **285,863.83** |

| வைப்புகள் | | |
|---|---|---|
| விடயம் | 2016 (ரூ.) | 2015 (ரூ.) |
| ஸ்ரீ லங்கா ரெலிகம் | 5,000.00 | 5,000.00 |
| சி.எப்க. தன மெல் என்ட் சன்ஸ் | 75,000.00 | 75,000.00 |
| **மொத்தம்** | **80,000.00** | **80,000.00** |



## இலங்கை மாநாட்டுப் பணியகம் 2016 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

| விடயம் | 2016 ('ரூ.) | 2015 ('ரூ.) | 2014 ('ரூ.) |
|---|---|---|---|
| இ.சு.அ.ச. நலன்புரி சங்கம் | 5,100.00 | | 7,500.00 |
| ஸ்ரீ லங்கா ரெலிகம் | | 3,573.68 | 12,681.41 |
| ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | 290,849.00 | 240,383.00 | - |
| டயலொக் ப்ரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் | | - | 5,214.71 |
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி. | 193,861.40 | 64,954.50 | 225,670.75 |
| செலுத்த வேண்டிய செலுத்துநர் வரி | (571.00) | 279.00 | 46.00 |
| போனிக்ஸ் ஒகில்வி | 1,785.93 | 1,785.93 | 1,785.93 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.நி. | 32,839.13 | 8,178.60 | - |
| மொபிடெல் ப்ரைவட் லிமிற்றட் | | - | 12,735.52 |
| சீல்சைன் | | - | 260,000.00 |
| தேசிய இளைஞர் மன்றம் | | - | 320,000.00 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் | | - | 181,520.00 |
| **மொத்தம்** | **523,864.46** | **319,154.71** | **1,027,154.32** |

### 2015 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒப்புரவுகள் பற்றிய கூற்று

| | மூலதன ஒதுக்கங்கள் | பிடித்துவைக்கப் பட்ட சம்பாத்தியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 2014 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 6,433,492.69 | 141,626,593.87 | |
| 2014 ஆம் ஆண்டிற்கான இலாபம் | | 49,594,172.98 | |
| சுற்றுலா அபிவிருத்தி வரி - வுகுசு | | (40,000,000.00) | |
| 2015 ஆம் ஆண்டிற்கான இலாபம் | | 27,407,006.15 | |
| 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 6,433,492.69 | 178,627,773.00 | 185,061,265.69 |
| மொத்தம | | **185,061,265.69** | |

இலங்கை சுற்றுலாத் துறையின் வியூகத் திட்டங்களுக்கமைய இலங்கை இணக்கப்பாட்டு சபை 2014 ஆம் ஆண்டு முழுவதும் இலங்கையில் MICE சுற்றுலாவிற்குரியதான வாய்ப்புக்கள் மற்றும் சகல வளங்களையும் கொண்டிருப்பதாக உலகம் எங்கும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக முழுமையான சந்தைக் கட்டமைப்பு மிகுந்த திருப்திகரமான மட்டத்தில் அமைந்தன. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் இணைந்து ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து பாரிய பிரச்சாரங்களை மேற்கொள்வதுடன் மிகப் பாரிய பணிகள் மற்றும் சேவைகள் சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

MICE சுற்றுலா மற்றும் அது சார்ந்த செயற்பாடுகள் ஊடாக கணிசமான அந்நிய நாட்டுச் செலாவணியினை உழைத்தல் மற்றும் அதனூடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குவதும் இலங்கை இணக்கப்பாட்டுப் பணியத்தின் செயற்பாட்டுப் பணிகளாகும். மேலும் இலங்கைச் சுற்றுலாச் செயற்பாட்டில் கூட்டங்கள் மற்றும் அது சார்ந்த விடயங்களை முழுமையாக MICE சுற்றுலாவின் தரம் மற்றும் தர நிர்வாக முறைமையினைப் பலப்படுத்துவது எமது செயற்பாடுகளின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளன.

SRI LANKA
CONVENTION BUREAU


**இலங்கை மாநாட்டுப் பணியகம்**
**இல. 78, ஹோட்டல் பாடசாலைக் கட்டடம்,**
**நான்காவது மாடி, காலி வீதி, கொழும்பு - 03**